DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. STC. 426/2021
**Depositions of PW 1 Witness for**

| | | | |
|---|---|---|---|
| Name | வைரமுத்து | Caste | |
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th Day of June 2024

Signature of Witness.

**18.06.2024**

2 ம்எதிரி ஆஜர். 1 ம் எதிரி ஆஜரில்லை. 1 ம்எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்போது சித்தமநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வேலை பார்த்து வருகிறேன். எதிரிகளை தெரியும் கடந்த 23.01.2021 ம் தேதி மாலை சுமார் 06.00 மணியளவில் எங்கள் ஊர் காளியம்மன் கோவில் முன்பு நடந்து சென்றுகொண்டிருந்த போது சின்னாத்தேவர் மகன் சவுந்தர்பாண்டியராஜன், ராமராஜ் மகன் செல்வம் ஆகிய இருவரும் என்னை வழிமறித்து தடுத்து நீ என்ன பெரிய சண்டியரா, நீ எங்களை விட பெரிய ஆளா என்று கேட்டு என்னை கையால் முதுகில் அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தினார்கள். அதை பார்த்து நாகேந்திரன், மருதுராஜ், சஞ்சீவிராஜா ஆகிய மூவரும் எதிரிகளை விலக்கி அனுப்பிவைத்தார்கள். மாலை 06.00 மணி ஆகிவிட்டதால் காயத்திற்கு வீட்டில் வைத்து வைத்தியம் பார்த்தேன். 24.04.2021 ம் தேதி காலை 06.00 மணிக்கு எம்.புதுப்பட்டி காவல் நிலையம் சென்று எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்ககோரி ஒரு

புகார்மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார்மனு **அ.சா.ஆ-1** ஆகும். இது சம்பந்தமாக போலீஸ் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை

DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. STC. 426/2021

**Depositions of PW 2 Witness for**

| Name | மருதுராஜ் | Caste | |
|---|---|---|---|
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th Day of June 2024

Signature of Witness.

**18.06.2024**

2 ம்எதிரி ஆஜர். 1 ம் எதிரி ஆஜரில்லை. 1 ம்எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். ஹோட்டல் செய்து வேலை பார்த்து வருகிறேன். எதிரிகளை தெரியும். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மாலை சுமார் 06.00 மணியளவில் எங்கள் ஊர் காளியம்மன் கோவில் முன்பு நடந்து சென்றுகொண்டிருந்த போது சின்னாத்தேவர் மகன் சவுந்தர்பாண்டியராஜன், ராமராஜ் மகன் செல்வம் ஆகிய இருவரும் அ.சா.1 யை வழிமறித்து தடுத்து நீ என்ன பெரிய சண்டியரா, நீ எங்களை விட பெரிய ஆளா என்று கேட்டு என்னை கையால் முதுகில் அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தினார்கள். அதை பார்த்து நானும், சஞ்சீவிராஜா, நாகேந்திரன் ஆகிய மூவரும் எதிரிகளை விலக்கி அனுப்பிவைத்தோம். இது சம்பந்தமாக அசா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரத்தை தெரிந்து கொண்டேன். இது சம்பந்தமாக போலீஸ் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள்  தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை